**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 79/2018

நாள்: 28.07.2026

பெயர்: அந்தோணிசாமி (வா.சா.3) த/பெ: சின்னப்பன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1. எனது அம்மா வழி தாத்தாவின் பெயர் அடைக்கலமா என்றால் தெரியாது. வாதியின் தாத்தாவும் எனது அம்மா வழி தாத்தாவும் சகோதரர்கள் என்றால் அதை குறித்தும் தெரியாது. வாதி எனக்கு அத்தை மகனா என்றால் இல்லை. ஒரே தெருவில் வசிக்கிறோம். எனது தாயார் பெயர் அகினேஷ் என்றால் சரிதான். தாவா சொத்து பேரூராட்சியில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் சீட் போட்டு ஒரு வீடும் மாடி வீடு ஒன்றும் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளின் கதவு எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேலே குறிப்பிட்ட மாடி வீடு கட்ட ஆரம்பித்தது சுமார் 10 வருடங்களுக்கு மேல் இருக்குமா என்றால் 4 அல்லது 5 வருடங்கள் இருக்கும். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் 10 வருடங்களாக முன் பகை இருக்கிறது என்றால் சரியல்ல. பேச்சு வார்த்தையில் தான் உள்ளோம். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் 10 வருடங்களாக முன் பகை இருக்கிறது என்றும் நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பேச்சு வார்த்தையில் தான் உள்ளோம். மேலே குறிப்பிட்ட சீட் போட்டு ஒரு வீடும் மாடி வீடும் கட்டுவதற்கு முன்பு அங்கு ஒரு கூரை வீடு இருந்தது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தான் சீட் போட்ட வீடடையும் மாடி வீட்டையும் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதி எனது அத்தை மகன் என்பதால் பொய்யாக முதல் விசாரணை அபிடவிட் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–அந்தோணிசாமி

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/–S.தனலெட்சுமி

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

ஜெயங்கொண்டம்